கனம் திரு. வெ. ராமைய்யா : அதெல்லாம் அமலுக்கு வந்த பிறகு நிதி நிலைக்குத் தகுந்தவாறு, தேவைக்குத் தகுந்த முறையில் முடிவு செய்யவேண்டிய விஷயம். முன்கூட்டியே அவசியமா இல்லையா என்பதைச் சொல்லத் தயாராக இல்லை.

திரு. மு. பொ. வடிவேல் : விவசாய வருமான வரி மூலம் கிடைக்கக்கூடிய பணம் அதிகாரிகளுக்குக் கொடுப்பதற்குத் தான் சரியாக இருக்கும் என்பது உண்மையா ? அது உண்மையானால் அந்த இலாகாவை எதற்காக வைத்திருக்க வேண்டும் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது உண்மையாக இருக்காது.

திரு. பி. முருகையன் : நிர்ணயிக்கப்பட்டிருக்கிற ஸ்டாண்டர்டுக்கு அதிகமாக நிலம் வைத்திருப்பவர்கள் விற்கக் கூடாது என்று சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பதற்காக நிலங்களை விற்க வேண்டுமென்றாலும் விற்க முடியவில்லை. அந்த மாதிரி நிலையில் உள்ளவர்கள் வாங்கிய கடன்களைக் கட்டுவதற்காவது அதிகமாயுள்ள நிலத்தை விற்க அனுமதி கொடுப்பார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் கூறுவது லாண்ட் சீலிங் சம்பந்தப்பட்ட சட்டத்தில் வரக்கூடியது. அந்தச் சட்டம் அமலுக்கு வரும் வரையில், உபரி நிலங்களை டிக்ளேர் செய்து முடிக்கும் வரையில் சுலபமாக விற்கவோ, வாங்கவோ இடம் இல்லை.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : இப்போது விவசாயிகள் தனியாக விவசாயக் கணக்குகளைக் கொடுத்து அதன் பிறகு சர்க்கார் வரி விதிப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. கணக்கு இல்லாத விவசாயிகள் அதிகமாக வரி கட்டவேண்டியிருக்கிறது. ஆகவே, நிலவரியோடு இந்த வரியையும் சேர்த்து வாங்குவது பற்றி சர்க்கார் யோசிக்குமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்போது இருக்கக்கூடிய சட்டப்படி கணக்குக் கொடுத்துத்தான் இந்த வரியைக் கட்ட வேண்டுமென்ற அவசியம் இல்லை. சிறு அளவுக்கு நிலம் வைத்திருக்கக்கூடியவர்கள் கம்பவுண்டிங் செய்து கொள்ளலாம் என்று சட்டத்தில் இடம் கொடுத்திருக்கிறார்கள். இதை அதிகமான பேர்கள் பயன்படுத்திக்கொண்டு வரியைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

Collections under the Madras Irrigation Act, 1955.

* 260 *Q.*—Sri M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Food be pleased to state the total collection up to 31st December 1964, under the Madras Irrigation (Levy of Betterment Contribution) Act, 1955?

The Hon. Sri V. RAMAIAH : Sir, no collection was made.

திரு. எம். வி. கரிவேங்கடம் : பெட்டர்மெண்ட் லெவி பிரகாரம் எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டிருக்கிறது.

The Hon. Sri V. RAMAIAH : I have just now stated that no collection has been made.

திரு. எம். வி. கரிவேங்கடம் : ஒரு சில சட்டங்களைத் திருத்தி புதிதாக பெட்டர்மெண்ட் லெவி பற்றிய சட்டத்தை ஆறு மாதங்களுக்கு முன் இந்தச் சட்ட மன்றத்தில் நிறைவேற்றினோம். அதன்படி வரி வசூலிக்கப்பட்டதா ? வசூலிக்கப்பட வில்லையானால் அதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : சட்டப்படி பெட்டர்மெண்ட் லெவியை நிர்ணயம் செய்வது கஷ்டமாக இருந்தது. அதைக் கொஞ்சம் நடைமுறையில் சாத்தியப்படக்கூடிய முறையில் திருத்தம் செய்யவேண்டுமென்ற அடிப்படையில் திருத்தம் செய்தோம். அந்த அடிப்படையில் பெட்டர் மெண்ட் லெவி போட்டு வசூலிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை ரெவின்யூ போர்டும் கீழ் இருக்கும் அதிகாரிகளும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

வட ஆற்காடு மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திற்குக் கட்டடங்கள்

* 261 கேள்வி.—**திரு. சி. கோதண்டராம பாகவதர் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு ஜில்லா கலெக்டர் அலுவலகம் மிகவும் பழைய கட்டடமாக இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதைப் புதுப்பிக்கும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) ஆம்.

(இ) அதைப் புதுப்பிக்கும் உத்தேசம் இல்லை.

புலவர் கா. கோவிந்தன் : அந்தக் கட்டடம் பழைய கட்டடம் மட்டு மல்ல, இடம் போதாத நிலைமையும் இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே, அந்தக் கட்டடத்தைப் புதிதாகக் கட்டிக் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்தக் கட்டடத்தை வேறு இடத்தில் அமைப்பதாக உத்தேசமில்லை. ஆனால் அங்கே இடநெருக்கடி இருப்பதை அரசாங்கம் உணர்ந்து அதைக் கொஞ்சம் விஸ்தரிக்கவேண்டுமென்ற முறையில் எஸ்டிமேட் சாங்ஷன் செய்தார்கள். ஆனால் தேசீய நெருக்கடி வந்த பிறகு அதுவும் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்துடன் வேறு தாலூகா இணைப்பு

* 262 கேள்வி.—**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நான்குனேரி தாலூகாவையாவது இராமநாதபுரம் சப்-தாலூகாவையாவது கன்னியாகுமரி மாவட்டத்துடன் சேர்க்க உத்தேசமுண்டா ?

(இ) ஆம் என்றால், காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) இல்லை.

(இ) வினா எழாது.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note*.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ADJOURNMENT MOTION *RE*. ACQUIREMENT OF BUILDINGS IN THE MANDAPAM CAMP.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, தற்போது சிலோன் சர்க்கார் வசம் இருக்கிற மண்டபம் காம்ப் கட்டடத்தை அவர்கள் விற்றுவிட முயற்சிக்கிறார்கள். அதை வாங்க இந்திய சர்க்கார் முயற்சி எடுத்து பேச்சு வார்த்தைகள் நடத்தியது. அவர்கள் கேட்கிற 20 லட்சம் ரூபாயைக் கொடுப்பதற்கில்லையென்றும், ஏற்கனவே அந்த இடத்தை பற்றிய ஜென்டில்மேன் அக்ரீமெண்ட் படி திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்கிறார்கள். அவர்கள் தர மறுக்கிறார்கள். ஆகவே, அந்தப் பேச்சு